குடிமக்கள் ஊடக நிகழ்ச்சித்
திட்டம்
மாற்றுக்
கொள்கைகளுக்கான
நிலையம்
முதல பாகம் -
ஜூன் - 2007

# vikalpa විකල්ප மாற்று வழி

## எமக்கு சொல்வதற்கு பல விடயங்கள் இருக்கின்றன...



*பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் வெளிவராத எமது செய்திகள் பல இருக்கின்றன*

ஊடகம் குடிமக்களுக்காகவே உள்ளது. ஊடகம் முதற்கண் குடிமக்களுக்கே பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது. ஊடகங்கள் மூலம் குடிமக்கள் பற்றியே பேசப்படுகின்றது. மக்களின் பிரச்சினைகளே ஆராயப்படுகின்றன. ஏனெனில், ஜனநாயகத்தின் அடிப்படை, விழிப்புடன் செயற்படும் மக்களேயாவர்.

உலகளாவிய ரீதியில் எடுத்துக்கொண்டாலும் சாதாரண குடிமக்கள் தொடர்பான ஊடகத்துறையின் பொறுப்பும் கடமையும் தொடர்பில் அடிக்கடி பிரச்சினைகள் தோன்றுகின்றன. உண்மைத்தன்மை, பக்கச்சார்பு, சமநிலை, பரந்த பிரதிநிதித்துவம், மக்கள் சேவைப் பெறுமதிகள் போன்ற, ஊடகங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பெருமளவிலான நற்குணங்கள் நாளுக்கு நாள் ஊடகவியலாளர்களிடமிருந்தும் ஊடக நிறுவனங்களிலிருந்தும் விலகிச்சென்றுகொண்டிருக்கின்றன என புகார்கள் எழுகின்றன.

**இதன் விளைவாக குடிமக்கள் ஊடகங்களை விட்டு விலகிச் செல்வதோடு அதன் மீதான நம்பகத்தன்மையும் சிதைந்து-போகிறது.**

அரசியல் அதிகாரத்திற்கான இழுபறியும், சிக்கலான வியாபாரப் போட்டியும் காரணமாக, ஊடகத்திற்குரிய மக்கள் சேவைப் பெறுமதிகள், சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றன. அதனை வேறுவிதமாகக் கூறுவதாயின், அரசியல் மற்றும் வாணிபம் ஆகியன ஊடகத்தின் செயற்பாட்டினை (நிகழ்ச்சி நிரலை) தமக்கேற்றவாறு எழுதிவருகின்றன.

பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி ஆகியனவே பரந்தளவில் மக்களுக்கு தகவல்களைத் திரட்டிக் கொடுக்கும் முக்கிய ஊடகங்களாக கருதப்படுகின்றன. இவற்றை ஒரு வகையில் பாரிய ஊடகங்கள் என்று கூறுவதிலும் தவறில்லை.

இவ்வாறான ஊடகங்களை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு பெருமளவிலான முதலீடு தேவைப்படுகின்றது. அதேபோன்று தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களை இயக்குவதற்கு ஏராளமான தொழில்நுட்ப மற்றும் அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன. ஆகையால், அநேகமான நாடுகளில் இந்த ஊடகங்களை நடாத்திச்செல்ல அரசு அல்லது பாரிய தனியார் முதலீட்டாளர்கள் தேவைப்படுகின்றனர்.

அரச ஊடகங்கள் சுயாதீன மக்கள் சேவைகளாக இயங்காது போனால் அவை ஏதேனும் ஒரு சாராரின் ஊதுகுழல்களாக மாறிவிடுகின்றன. மறுபுறம் பாரிய வாணிப ஊடக நிறுவனங்களின் அரசியல் மற்றும் வாணிப சுயாதீன நிலைப்பாடு தொடர்பில் பெரும் நெருக்கடிகள் உருவாகின்றன.

ஊடகங்கள் குடிமக்களைப் பற்றி அக்கறை கொள்ளாததன் விளைவாக உருவெடுத்த மாற்று ஊடகங்கள் பற்றியும் நாம் அறிவோம். பிரதான ஊடக நீரோட்டத்தில் கவனத்தைப் பெறாத மக்கள் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சமூக வானொலி மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இதில் முக்கியமானவையாகும்.

உலகின் சில நாடுகளிலும் சமூக ஊடகங்கள் சாதாரண குடிமக்களுக்காக முக்கிய பங்காற்றியுள்ளன. ஆயினும் எமது நாட்டில் அவ்வாறான தரம் மிக்க சமூக ஊடக கலாச்சாரம் காண்பதற்கில்லை. பல்வேறு இழுபறிகளும் அரச செயற்பாடுகளின் மந்தகதியும் காரணமாக இடை நடுவில் முடங்கிப்போன பல முயற்சிகளே காணக்கூடியதாக உள்ளன.

எது எவ்வாறாயினும் கொழும்பிற்கு வெளியே சில பிரதேசங்களில் சில குடிமக்கள் குழுக்கள் சுயேச்சையாக முன்வந்து சமூக மையப் பத்திரிகைகள், சமூக விளம்பரப் பலகைகள் போன்றவற்றை உபயோகிக்க எத்தனிக்கின்றமை உற்சாகத்திற்குரிய விடயமாகும்.

இதன் காரணமாக 'இடைப்பட்ட ஒருவரின்' அதாவது, ஊடகவியலாளர் ஒருவரின் சேவையினைப் பெற்றுக்கொள்ளாமலேயே தமது கருத்துக்களைத் தாமே நேரடியாகக் கூறும் வாய்ப்பு மக்கள் முன் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் குடிமக்கள் ஊடகவியலாளராக மாற்றம் பெறுகின்றனர். இந்த முறை உலகளாவிய ரீதியில் மிக வேகமாகப் பரவிவருகின்றது.



*எங்கள் தகவல்கள் எங்களது குரலில்...*

## அதுவே குடிமக்கள் ஊடகம்

இன்றைய உலகில் இணையத்தளம் ஊடாகச் செயற்படும் குடிமக்கள் (பிரஜை) ஊடக செயற்பாடு அநேகமான நாடுகளில் காணப்படுகின்றன. இலங்கையில் இம்முறை இன்னும் ஒரு புதிய ஊடக அனுபவமாகவே உள்ளது.

இணையத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான வளங்கள் பற்றாக்குறை மற்றும் அது தொடர்பான புரிந்துணர்வின்மை, இச்செயற்பாட்டினை ஊக்குவிக்கும், அறிவுபுகட்டும் செயற்பாடு பரந்தளவில் இடம்பெறாமை போன்றவையும் இதற்குக் காரணமாகும். அதேபோன்று சில சமயம் நாடளாவிய ரீதியில் இணையத்தள வசதிகள் கிடைக்காமையும் சிங்கள மொழி மூலம் மின் அஞ்சல் (ஈ-மெயில்) மற்றும் இணையத்தளங்கள் போன்றவற்றை இயக்குவதற்கு இருக்கும் தடைகளும் காரணமாக அமையலாம்.

இவ்வகையான தடைகளை இனங்காண்பதன் மூலம் அவற்றை வெற்றிகொள்ளும் முறைகளைப் பற்றி சிந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

ஊடகம் தொடர்பில் சிவில் சமூகம் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்வதற்கான நிகழ்ச்சிகளை கடந்த வருடம் நாம் செயற்படுத்தியமை உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அதனை மேலும் முன்னெடுத்துச் செல்லும் முகமாக நாம் மேலும் ஓர் புதிய வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். அது குடிமக்கள் ஊடக வேலைத்திட்டம். அதன் மூலம் மேற்குறிப்பிட்ட குறைபாடுகள், பிரச்சினைகள் போன்றவற்றை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்வதும், குரல் இல்லா மக்களுக்கு குரலெழுப்ப ஒரு வாய்ப்பினையும் உருவாக்கலாம்.

## குடிமக்கள் ஊடகம் எவ்வாறு செயற்படுகின்றது?

குடிமக்கள் (பிரஜைகள்) ஊடகம் என்பது தமது விபரங்கள், கருத்துக்கள், தகவல்கள் போன்றவற்றைத் தாமே ஏதேனும் ஒரு ஊடகம் வாயிலாக வெளிப்படுத்துவதாகும். இந்த ஊடகம் இணையத்தளமாக இருத்தல் அவசியமில்லை. ஆயினும், ஏனைய ஊடகங்கள் வசம் இல்லாத சில சாதகமான தன்மைகளும் இணையத்தள ஊடகத்தினை உபயோகிப்பதன் மூலம் பெறலாம்.

- எந்த ஒரு முதலீடுமின்றி அனைத்து குடிமக்களுக்கும் இந்த ஊடகத்தின் மூலம் தமது தகவல்களை, கருத்துக்களை வெளியிடலாம்.
- வேறெந்த ஒரு ஊடகத்திற்கும் சென்றடைய முடியாத அளவிற்கு பெருந்தொகையானவர்களை சென்றடையலாம். அதாவது, நாட்டில் எல்லை ஏதும் கிடையாது.
- தகவல்களை வெளியிடுவோர் பற்றி விபரங்களை இரகசியமாக வைத்துக்கொள்ளலாம்.
- மிகத் துரிதமாக பதில்களை/ கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகையால், குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பல்வேறு திசைகளை நோக்கிய பரந்த கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம்.
- ஏனைய ஊடகங்களுடன் ஒப்பிடுகையில் அரச அல்லது வேறு தாக்கங்களால் இவ் ஊடகத்துறையை முடக்குவது கடினமாகும்.
- முன்னைய அனுபவங்கள், தகைமைகள் தேவைப்படுவதில்லை. குறிப்பிட்ட சாஸ்திர முறைகளுக்கு அமைய எழுதும் தேவை ஏற்படுவதில்லை. எவர் விரும்பினாலும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காவண்ணம் தமது கருத்துக்களை வெளிப்படுத்தலாம்.

## குடிமக்கள் ஊடகம் பற்றிய சில தவறான கருத்துக்கள்

**கணனி இன்றி, இணையத்தள வசதிகள் இன்றி என்ன குடிமக்கள் ஊடகம்?**

**உண்மை:** குடிமக்கள் ஊடகம் அடிப்படையில் இணையத்தளத்தினை மையமாகக் கொண்ட ஊடகம்தான். ஆயினும், அவ்வசதிகள் இல்லாதபோதிலும் எழுத்துவடிவம் கைகொடுக்கக் குமுறியெழும் கருத்துக்கள் இருந்தும் அவற்றை வெளியிட வாய்ப்பும் வழியும் இல்லாத எவருக்கும் தமது கட்டுரைகளை, புகைப்படங்களை, செய்திகளை குடிமக்கள் ஊடகத்தினை நடத்துகின்ற நிறுவனத்திடமோ, நபரிடமோ கையளிக்க முடியும். தற்சமயம் இலங்கையில் இவ்வாறான குடிமக்கள் ஊடக இணையத்தளங்கள் சில இருக்கின்றன.

**இவற்றை ஆங்கிலம் மூலம் அல்லவா செய்யவேண்டும்?**

**உண்மை:** ஆங்கிலம் சர்வதேச மொழியாக இருப்பதால் அதன் வாசகர்கள் உலகளாவிய ரீதியில் இருக்கின்றனர். ஆயினும், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் எழுதக்கூடிய குடிமக்கள் ஊடக இணையத்தளங்கள் தற்போது இருக்கின்றன. groundviwes அப்படியான ஒரு இணையத்தளமாகும். (www.groundviwes.org) எமது இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நாம் இன்னுமோர் மும்மொழி குடிமக்கள் ஊடக இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்துள்ளோம். அதுபற்றிய முழு விபரமும் எமது அடுத்த இதழில் உள்ளடக்கப்படும்.
அது தான் **"மாற்றுவழி"** (www.vikalpa.org.)

ஆகையால், நீங்கள் ஏதேனும் கூற விரும்பினால் அதற்கு மொழியோ, தொழில்நுட்பமோ மேலும் ஒரு தடையாக அமையாது.

**எமது வேலைத்திட்டத்தின் கீழ் நாம் எதனைச் செய்ய இருக்கின்றோம்?**

- தேர்ந்தெடுக்கப்பட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த செயற்றிறன் மிக்க குடிமக்கள் குழுவொன்றிற்கு குடிமக்கள் ஊடகப் பயன்பாடு பற்றிய அறிவினைப் புகட்டுதல்.
- குடிமக்கள் ஊடகத்துறையின் செயற்பாட்டு ரீதியில் இணைந்துகொள்ள அவர்களை ஊக்குவிப்பதும் அதற்குத் தேவைப்படும் வசதிகளை இயன்ற அளவு பெற்றுக்கொடுத்தலும்.
- குடிமக்கள் ஊடக இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்தல், அது உட்பட ஏனைய குடிமக்கள் ஊடக இணையத்தளங்களுக்கு தொடர்ச்சியாக ஆக்கங்களை எழுதும் உற்சாகமிக்க குழுவினை உருவாக்குதல்.
- இறுதியாக, சாதாரண குடிமக்களுக்கு தமது கருத்துக்களைத் தடையின்றி வெளிப்படுத்தக்கூடிய ஊடகமாக குடிமக்கள் ஊடகப் பயன்பாட்டை இலங்கையில் பரவச்செய்து அதன் மூலம் ஊடகத்துறைக்கு ஒரு சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துதல்.

CPA
Centre for Policy Alternatives

குடிமக்கள் ஊடக வேலைத் திட்டம்
ஊடகப்பிரிவு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
1சீ, 28ஆம் ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : 011-2375269, 011-2375012
தொலை நகல் : 011-2375623

**"மாற்று வழி" இணையத்தளத்துடன் தொடர்பு கொள்வதற்கு மின்னஞ்சல் முகவரிகள்**

**contributions@vikalpa.org**
**editor@vikalpa.org**
**info@vikalpa.org**

# www.vikalpa.org

**"மாற்று வழி" குடிமக்கள் ஊடக இணைய தளத்துக்கு நீங்களும் எழுதுங்கள்**

"மாற்று வழி" என்ற பெயரில் மும்மொழிகளிலும் குடிமக்கள் ஊடக இணையதளமொன்றை நாங்கள் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பித்துள்ளோம்.

**www.vikalpa.org** என்பதே இணையதளத்தின் முகவரி

மனித உரிமைகள், சமாதானம், ஜனநாயகம், அரசாட்சி, யுத்தம், சமாதானம்...... ஆகிய எந்தவித துறைகள் தொடர்பாகவும் உங்களுக்கு சமூகத்தின் ஏனைய குடிமக்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என நினைக்கும், அவர்களை அறிவூட்டக் கூடியதென நீங்கள் நினைக்கும் சம்பவங்கள் மற்றும் கருத்துக்களை சிங்களம் அல்லது தமிழ் மொழியில் "மாற்று வழி" இணையளத்துக்கு எழுதுங்கள். அல்லது உங்கள் கட்டுரையை எமக்கு அனுப்பி வையுங்கள்.

**குடிமக்கள் ஊடகம் தொடர்பான மேலதிக தகவல்களுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.**

## குடிமக்கள் ஊடக இணையத்தளங்கள் சில

### இலங்கையில் இணையத்தளங்கள்

Groundviews
www.groundviews.lk
Kottu
www.kottu.org
Sinhala blogs
http:sinhalablogs.coconia.net
VOR Radio

http:/radio.
voicesofpeace.lk

### உலகில் இணையத்தளங்கள்

**http://www.bbc.co.uk/dna/ican**

**http://www.current.tv**
**http://newsvine.com**

**http://English.ohmynews.com**
**http://parmedia.org**

Centre for Citizen Media
http://citmedia.org/

Principles of Citizen Journalism
http://www.citmedia.org/principles

The Largemouth Citizen Journalism Manual

http://www.mcgillreport.org/largemouth.htm